**செ. கு. எண்: 278** **நாள்: 08.12.2020**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு **எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்</u>
<u>**அறிக்கை – 8.12.2020**</u>

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், ராஜன்குப்பம் பகுதியைச் சேர்ந்த திரு.எட்வின் என்பவரின் மனைவி திருமதி கரோலின் பிரமிளா மற்றும் அவருடைய மகள் செல்வி ஈவிலின் கெசியா ஆகிய இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, அடையாளம்பட்டு கிராமம், நொளம்பூர் அருகே மழைநீர் கால்வாயில் தவறி விழுந்து உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து வேதனை அடைந்து, அவருடைய குடும்பத்திற்கு நேற்று (7.12.2020) இரங்கல் தெரிவித்திருந்தேன்.

இந்நிலையில், கால்வாயில் தவறி விழுந்து உயிரிழந்த திருமதி கரோலின் பிரமிளா மற்றும் அவருடைய மகள் செல்வி ஈவிலின் கெசியா ஆகியோரது குடும்பத்திற்கு தலா 2 லட்சம் ரூபாய், ஆக மொத்தம் 4 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**